# திலீபனின் நினைவேந்தல் ஊர்திக்குத் தடை பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு!



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார் கோரிய தடை உத்தரவை நிராகரித்து வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், குறித்த ஊர்தி செல்லும்போது பொதுமக்களுக்கு இடையூறு மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்தாத வகையில் பொலிஸ் பாதுகாப்பினை வழங்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த ஊர்திப் பவனி வவுனியாவிற்கு வந்தால், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவும் சீர்குலையும் என பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதனைக் கவனத்தில் எடுத்த வவுனியா நீதிமன்றம், இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தது.

அத்தோடு இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. (க)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 01 திங்கட்கிழமை 18.09.2023 கதிர் 74



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## பொருளாதார வீழ்ச்சியடைந்த நாடென இலங்கையை அறிவித்தது சட்டவிரோதம்

### விசாரணை நடத்தக் கோருகிறார் வஜிர



இலங்கையைப் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடாகவும் வங்குரோத்து அடைந்த நாடாகவும் அறிவித்தமை சட்டவிரோதமான செயற்பாடு, என ஆளுங்கட்சியின் ஆதரவாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான

2➤

## தாயகத் தமிழர் மீதான அடக்குமுறை இந்தியா தடுத்து நிறுத்திட வேண்டும்

### நாம் தமிழர் சீமான் வலியுறுத்தல்!

தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழ்நாட்டு அரசாங்கம் இந்திய ஒன்றிய அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்

2➤



## யாழ் பல்கலையில் தியாகி திலீபனின் உண்ணாவிரத நான்காம் நாள் நினைவு

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் இன்று பல்கலைக்கழக பிரதான வளாக பொதுத் தூபியில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் முன்னிலை வகிக்க, முகாமைத்துவ மற்றும் வணிக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் ஆர்.கஜனின் வழிகாட்டலில் இன்றைய தின நினைவேந்தல்கள் மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஆளணியினர், ஊடகவியலாளர் எனப் பலரும் இந்த நினைவேந்தலில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## திலீபன் நினைவு ஊர்தி மீதான இனவெறித் தாக்குதல் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கமும் கண்டனம்!

தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீதான இனவெறித் தாக்குதலுக்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தியாக தீபம் திலீபனின் உருவம் தாங்கிய ஊர்தி மீது நேற்று திருகோணமலை, கப்பல்துறையில் வைத்து இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் காவல்துறையினர் சூழ்ந்திருக்க,

2➤

## கஜேந்திரன் மீதான தாக்குதல் சந்தேக நபர்கள் ஐவர் கைது!



திருகோணமலை சர்தாபுரப் பகுதியில் தியாகி திலீபனின் ஊர்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் நேற்றைய தினம் தாக்கப்பட்டமை தொடர்பில் 5 சந்தேக நபர்கள் சீனன் குடா பொலிஸாரினால் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் 2 நாட்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் இரண்டு நாட்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நாளை மறுதினமும் வியாழக்கிழமையும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி.தர்சன் அறிவித்துள்ளார்.

மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது போன்றன சுகாதாரக் கட்டமைப்பைப் பாதிக்கும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அதனைத் தடுக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இரு தினங்கள் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி.தர்சன் மேலும் தெரிவித்துள்ளார். (04)

# வாகன வர்ணங்களை ஸ்கான் செய்து வர்ணப் பூச்சுக்களைத் தரும் நுட்பம் நிப்பொன் பெயின்ட்டினால் அறிமுகம்











வாகனங்களின் வர்ணங்களை ஸ்கான் செய்து, அவற்றுக்கேற்ற வர்ணங்களை கலவை செய்து கொடுக்கக்கூடிய தொழிநுட்பத்தை நிப்பொன் பெயின்ட் லங்கா நிறுவனம் இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

N-Max SB>Spectrophotometer PP6 ஆகியவற்றினை அறிமுகம் செய்யும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் நிப்பொன் பெயின்ட் லங்கா நிறுவனத்தின் பொது முகாமையாளர் நேமந்த அபேசிங்கவுடன் இந்தியாவிலுள்ள தலைமை நிறுனத்தின் மூத்த உயரதிகாரிகளான சரத் மல்ஹோத்ரா, திவாகர் மெஹொத்ரா ஆகியோரோடு நிப்பொன் பெயின்ட் லங்கா நிறுவன மூத்த அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர் (04)

## திலீபன் நினைவு ஊர்தி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனவெறி கொண்ட காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தியாகி திலீபன் தமிழ் மக்களின் உரிமைக்காய் காந்தியை விஞ்சிய வகையில் அகிம்சை வழியில் போராடிய போராளி. அவரின் தியாகங்கள் என்றென்றும் அனைவராலும் மதிக்கப்படுவதுடன், சர்வதேசத்தினால் அவரது தியாகம் வியந்து பார்க்கப்படுகின்றது.

ஈழத்தமிழர் எதிர்கொள்ளும் சவால்களை உலகறியச்செய்த பார்த்தீபனின் தியாகத்தினைக் கண்டு சிங்கள பௌத்த தேரர் ஒருவர் கடந்த வருடம் கவிதை இயற்றியிருந்தமை யாவரும் அறிந்ததே.

இவ்வாறான பெருமை மிக்க பெருந்தகையின் திருவுருவப்படத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இனவெறித்தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்பதுடன் எமது நினைவேந்தல் உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளதையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

மேலும், இவ்வூர்தியில் சென்றுகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் அவருடன் பயனித்தவர்கள் மீதான தாக்குதல்கள் இலங்கையில் சிறப்புரிமை கொண்ட, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில், உள்நாட்டுக்குள் விசாரணை, தீர்வு என்பவை சாத்தியமற்றவை என்று நாம் தொடர்ந்து கூறிவருவதன் காரணங்களை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது, என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## தாயகத் தமிழர் மீதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல், ஜனநாயக முறையில் தமிழர்கள் ஒருபோதும் உரிமையைப் பெற்றுவிட முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த இந்தியா வலியுறுத்த வேண்டும் எனவும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

## பொருளாதார வீழ்ச்சியடைந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் சில அதிகாரிகள் தொடர்பாக அரசாங்கம் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன், புலனாய்வுத்துறையினர் இது தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார வீழ்ச்சி குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட குழுவில் கருத்துக்களை முன்வைக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரலில் இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக பிரகடனப்படுத்தப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி சீனாவுக்கு 70 மில்லியன் டொலர்களைச் செலுத்த வேண்டியிருந்தது. அதைச் செலுத்த டிசம்பர் வரை கால அவகாசம் இருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

2022 இல் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் 7.2 பில்லியன் டொலர்கள், ஏப்ரல் மாதத்திற்குள் மூன்று பில்லியன் (3.2) டொலர்கள் செலுத்தப்பட்டிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், அவசர அவசரமாக நிதியமைச்சர் இராஜினாமாச் செய்தார். மத்திய வங்கியின் ஆளுநர் பதவி விலகுகினார். வெளிநாட்டில் இருந்த ஒருவர் வரவழைக்கப்பட்டு மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் நாட்டை திவாலான நாடாக அறிவித்தார். அது அவரது கடமையல்ல. ஆனால், அதனையே அவர் செய்துள்ளார், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு திவாலானதாக அறிவிக்கப்பட்ட தருணத்தில், அதன் பின்புலத்தில் எந்தெந்த நபர்கள் இருந்தார்கள் என்பதை நாடாளுமன்றக் குழு கண்டறிய வேண்டும். அவர்களின் குழந்தைகள் சிறப்பு இடங்களில் பலன் பெற்றுள்ளார்களா? என்பதையும் ஆராய வேண்டும்.

ஒரு சிலரின் விருப்பத்திற்கு அடிபணிந்து 70 மில்லியன் டொலர்களுக்கு நாட்டை திவாலானதாக அறிவிப்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல.

மத்திய வங்கியிலும் நிதியமைச்சிலும் உள்ளவர்களை அரசாங்கம் மிகவும் கவனமாகப் பார்க்க வேண்டும். புலனாய்வுத் துறையினர் இவர்களை விசாரிக்க வேண்டும்.

கடந்த காலப் போராட்டத்தின் போது மக்கள் பிரதிநிதிகளின் 100 வீடுகள் எரிக்கப்பட்டிருந்தன. இதற்கு முக்கிய காரணம் நாடு திவாலானதாக அறிவிக்கப்பட்டமையே.

7.2 பில்லியனில் 3.2 பில்லியன் கடனைச் செலுத்தி நாட்டைத் திவாலானதாக அறிவித்தது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்







# சாய்ந்தமருதில் மீனவர்கள் சாலை மறியல் போராட்டம்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் கடலரிப்பினால் தமது மீனவ வாடிகள் முழுமையாகக் கடலுக்குள் அடித்துச் செல்லப்படுவதாகவும், மீனவ நடவடிக்கைகளுக்கு இடையூறாக பாறாங்கற்களைக் கொண்டு வீதிகளை மறித்து வைத்திருப்பதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதாகத் தெரிவித்தும் சாய்ந்தமருது மீனவர்களும் மீனவ வாடி உரிமையாளர்களும் சாலை மறியல் போராட்டத்தில் இன்று காலை ஈடுபட்டனர்.

கரையோரம் பேணல் திணைக்களம் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கடலரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் பாறாங்கற்களை, சாய்ந்தமருது கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் தேக்கி வைத்திருப்பதாகவும் இதனால், மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் இருப்பதாகவும் மீனவர்கள் தமது போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

மேலும், மீன்பிடி வள்ளங்களைக் கரைக்கு இழுத்து வந்து வைக்க முடியதளவில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளமையால், உடனடியாகக் கடலரிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை கரையோரம் பேணல் திணைக்களம் துரிதப்படுத்த வேண்டும் என்றும் மீனவர்கள் கேட்டுக் கொண்டனர். கரையோரம் பேணல் திணைக்களத்தின் இந்த நடவடிக்கையால் மீனவர்கள் தொடர்ந்தும் காயமுற்றுவருவதாகவும் மீனவ நடவடிக்கைகளுக்கு இடையூறாகப் பாறாங்கற்களை வைத்திராது, உடனடியாக அகற்றும் வேலைகளைத் துரிதப்படுத்துமாறும் போராட்டக் களத்தில் கோஷங்கள் எழுந்தன.

போராட்டத்தின்போது, வீதிகளை இடைமறித்து மீன்பிடி வள்ளங்களை நிறுத்தி வைத்திருந்தமையால் இலங்கையின் முக்கிய மீன் வியாபாரச் சந்தையைக் கொண்டிருக்கும் அந்தப் பிரதேசத்தில் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த வாகனங்கள் அரை மணித்தியாலமளவில் தரித்து நிற்க நேரிட்டது.

களத்திற்கு வந்த சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான சாய்ந்தமருது பொலிஸார் அங்கிருந்த கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர் ஏ.எம். நுஸ்ரத் அலியிடமும், மீனவர்களிடமும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இணக்கமான நிலையை உருவாக்கி நிலைமையைச் சுமுகமாக்கி, போக்குவரத்தையும் சீர் செய்தனர்.

இந்தப் பிரச்சினை வாக்குறுதியளிக்கப்பட்டவாறு முடிவுக்குக் கொண்டு வரப்படாமல் விடப்பட்டால், பெரியளவில் போராட்டத்தை நடத்த உள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாரிசவாத நோயாளியின் எடையினைப் படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடிய டிஜிட்டல் இயந்திரம் அன்பளிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

பாரிசவாத நோயாளியின் நிறையினைப் படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடிய டிஜிட்டல் இயந்திரம் ஒன்று கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் வாழும் இலங்கையைச் சேர்ந்தவரும், லண்டன் “எல்டெர்லி கிங் ஜோர்ஜ்” வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணரும், வைத்திய கலாநிதியுமான டொக்டர். காந்தா நிரஞ்சன், நான்கு இலட்சம் பெறுமதியான குறித்த நிறை அளவிடும் டிஜிட்டல் இயந்திரத்தை அன்பளிப்புச் செய்தார்.

இந்த நிறை அளவிடும் இயந்திரமானது, பாரிசவாத நோயாளிகளின் நிறையினைப் படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடியதாகும்.

பாரிசவாத நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் மருந்தின் அளவானது அவர்களின் நிறையினைக் கருத்தில் கொண்டே கொடுக்கப்படுகிறது.

எனவே, இதன் தேவை கருதி பாரிசவாத சிகிச்சைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் என்.இதயகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க, வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர். இரா.முரளீஸ்வரனின் ஒழுங்கமைப்பில் இந்த இயந்திரக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டொக்டர் ஜே.மதன், பொது வைத்திய நிபுணர்களான டொக்டர் என்.இதயகுமார், டொக்டர் எம்.என்.எம். சுவைப், தாதிய பரிபாலகி திருமதி எல்.சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.







Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர் 27, 28, 29
4.00 மணி
9.00 மணி
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BOC
The Thinnai
TILKO
Chrysalis
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# ரஷ்ய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வடகொரியா திரும்பினார் கிம் ஜோங் உன்



வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன் ரஷ்ய அதிபர் புடினை சந்திக்க கடந்த வாரம் தலைநகர் பியாங் யாங்கில் இருந்து சிறப்பு ரெயில் மூலம் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். கொரோனா ஊரடங்குக்குப் பின்னர் அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும். அப்போது அவருடன் வடகொரியாவின் ராணுவ உயர் அதிகாரிகளும் சென்றனர்.

ராணுவத்தை நவீனமயமாக்க முயற்சி இந்தப் பய ணத்தில் அதிபர் புடின், ராணுவ அமைச்சர் செர்ஜி ஷோய்கு மற்றும் பிற ராணுவ உயர் அதிகாரிகளை கிம் ஜோ உன் சந்தித்துப் பேசினார். இதனையடுத்து விளாடிவோஸ்டாக்கில் உள்ள ராணுவத் தளத்துக்கு அவர்கள் சென்றனர். அப்போது தங்களது ராணுவ திறன்கள் மற்றும் ஆயுதங்கள் குறித்து ரஷ்ய ராணுவ அதிகாரிகள் கிம் ஜாங் அன்னுக்கு விளக்கம் அளித்தனர்.

அதேபோல் ரஷ்யாவின் முக்கிய விண்வெளித் தளங்களுக்கும் சென்று அவர் பார்வையிட்டார். இதன் மூலம் தனது ராணுவத்தை நவீனமயமாக்க முயற்சிப் பதாக தென்கொரியா குற்றம்சாட்டி வருகிறது.

மேலும் ரஷ்யாவுக்கு ஆயுத பரிமாற்ற ஒப்பந்தம், ராணுவத்துக்கு இடையேயான மூலோபாய மற்றும் தந்திரோபாய ஒருங்கிணைப்பு போன்றவை குறித்தும் அவர்கள் விவாதித்தனர். இந்தநிலையில் கிம் ஜோங் உன் தனது ரஷிய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

கிம் ஜோ உன்னின் இந்தப் பயணத்தினை தென்கொரியா கடுமையாக சாடியுள்ளது. இதுகுறித்து தென்கொரிய அதிபர் யூன் சுக் இயோல் கூறுகையில், ஹஆயுதப் பரிமாற்ற ஒப்பந்தம் குறித்து வடகொரியா பேச்சுவார்த்தை நடத்தியது ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்துக்கு எதிரானது. எனவே வடகொரியா-ரஷ்யா நாடுகளுக்கு இடையே பெருகி வரும் இந்த ராணுவ ஒத்துழைப்பைச் சமாளிக்க ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும்' என மற்ற உலக நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# புதிய ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது சீனா

வானில் ஆதிக்கம் செலுத்தும் வகையில் சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் யோகன்-39 என் னும் தொலை உணர்வு செயற்கைக்கோளை ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து ஏவியுள் ளது.

இந்த செயற்கைக்கோள் அதிநவீன புவி கண் காணிப்புப் பணியை மேற்கொள்ளும் என்றும், யோகன் 39 லாங் மார்ச்-2டி கரியர் ரொக்கெட் மூலம் ஏவப்பட்டு, திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நுழைந் தது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (04)






# மாஷா அமினியின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தன்று தந்தை கைது

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் கடந்த ஆண்டு ஹிஜாப் சரியாக அணியவில்லை எனத் தெரிவித்து பொலிசாரால் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளம் பெண் மாஷா அமினி, விசாரணையின்போது மர்ம மான முறையில் உயிரிழந்தார்.

இதனைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது. இதில் போராட்டக்காரர்களுக்கும் பொலிசா ருக்கும் இடையே நடந்த மோதலில் குழந்தைகள், பெண் கள் உள்பட 500 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந் தனர். மேலும் 2,000த்திற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்ததாகவும், ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதாகவும் மனித உரிமைக்குழுக்கள் தெரிவித்துள்ளன. இந்தப் போராட்டங்கள் தொடர பாக 7 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள் ளன.

இதனிடையே மாஷா அமினி உயிரிழந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், அரசின் எச்சரிக்கையை மீறி மாஷாவின் பெற்றோர் தங்கள் மகளின் கல்லறையில் நினைவு தினம் அனுசரிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் மாஷா அமினியின் தந்தை, அவரது மகளின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தன்று கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கைக்குப் பிறகு விடுவிக்கப்பட்டுள்ளார். (04)



# வெளிநாட்டு, உள்ளூர் சக்திகள் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல்!

## சட்டத்தரணி ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு



(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் வெளியான சனல்-4 காணொளி விடயம் பொய்யாகப் புனையப்பட்டதல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளன போன்றே தெரிகிறது.

சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகின்றன.

இலங்கை முஸ்லிம்களைக் குறிவைத்து, அதிகாரக் கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட பெரிய சக்திகளின் பந்தாடலுக்குள் இலங்கை முஸ்லிம் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது.

பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் கொலையுடனையே முஸ்லிம் சமூகத்தின் மீதான பந்தாடல்கள் ஆரம்பித்துள்ளதாக நம்புகிறேன், என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்று இரவு நடைபெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போ ரிலீப் அமைப்பின் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டுசெல்கின்றன. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன-அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்புக் கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது. இலங்கையில் யார் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தைய சக்திகளாகவே இருக்கின்றன. அவர்கள் தமது சுயநலனுக்காக சுயாதீனமாக எமது நாட்டைக் கொண்டுசெல்ல விடமாட்டார்கள். அவர்கள் சரியாகத் திட்டமிட்டு நாட்டைச் சீரழிக்கக் காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக, சனல் - 4 இல் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை இலேசில் தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கின்றன. முஸ்லிம்களைப் பலிக்கடாவாக்கி, முஸ்லிம்கள் மீது பழி சுமத்தி, தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல்.

இதில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு, கிறிஸ்தவ சமூகமும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. அது போன்றே தலைவர் அஷ்ரபின் மரணமும் பல மர்மங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வாய்ப்பிருப்பதனால் பல்வேறு காய்கள் நகர்த்தப்படும். இலங்கையர்களான நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

அந்நிய சக்திகளின் பொறியில் மாட்டிக்கொண்ட இலங்கை போலவே, வடக்குக் கிழக்கில் அதிக முஸ்லிங்களைக் கொண்ட கேந்திர நிலையமான கல்முனையும் மாட்டிக்கொண்டுள்ளது.

இவைகளையெல்லாம் பற்றி சிந்திக்காது கல்முனை நகரில் உள்ள சில மனநோயாளிகள் சம்பந்தமே இல்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள். கல்முனை மாநகரின் மகிமையைப் பாதுகாப்பதில் மருதமுனையின் பங்களிப்பு அளப்பரியது. இந்த மனநோயாளிகளைப் பற்றிப் பேச இந்த இடம் போதாது. இவர்களைப் பற்றிப் நிறைய பேச வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அவர்களைப் பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ்ப் பேராசியர்கள் தனது இனத்தின் வேட்கைக்காக மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்து களப்பணி செய்வது போல, முஸ்லிம் சமூகத்தில் முஸ்லிம்களை அரசியல் மயப்படுத்த பேராசியர் எம்.எம். பாஸீல் களத்தில் இருப்பதை காண்கிறேன்.

தனது மேற்கொண்ட ஆய்வுகளை கொண்டு, சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கும் இலங்கை முஸ்லிங்களின் கல்வி ஆளுமை அவர். இப்படியானவர்களை முஸ்லிம் சமூகம் பயன்படுத்தி முஸ்லிங்களுக்கு எதிரான சவால்களை முறியடித்து, தீய சக்திகளின் திட்டங்களிலிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாத்து, நமது ஒற்றுமையைப் பலப்படுத்த இளைஞர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் முன்வர வேண்டும், என்று வலியுறுத்தினார்.

# பெரியநீலாவணையில் 230 மாணவர்களுக்கு இராமகிருஷ்ண மிஷனால் கற்றலுபகரணங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன், பெரியநீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த 230 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆசிரமத்தின் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்த ஜீ மகராஜ் அருளுரை வழங்கி, கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்குக் கையளித்தார்.






# தாதியர் பயிற்சிக்கு மாணவர்களை உள்வாங்கல் சுகாதார அமைச்சு விண்ணப்பங்களை கோரியது

தாதியர் பயிற்சிக்காக மாணவர்களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் 2023 ஆம் ஆண்டுக்கான தாதியர் பயிற்சிக் கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பதற்கு இணையத்தள வழியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக 2019, 2020 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என்றும் ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் வழியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்க வேண்டும்என்பதுடன், விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளம் ஊடாக மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2023 க்கு விண்ணப்பிக்க - http://recruit.health.gov.lk/




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2023இல் வெளியிடப்பெற்றது.